பக்கங்கள்: 12

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 ஆவணி 04 செவ்வாய்க்கிழமை 20.08.2024 கதிர் 286

## ஆட்சியைப் பொறுப்பேற்க அழைப்பு தரப்படவில்லை

### ரணிலின் கருத்தைச் சாடுகிறார் அனுர

ஆட்சியைப்பொறுப்பேற்குமாறு தேசிய மக்கள் சக்திக்கோ தனக்கோ ராஜபக்சக்கள் அழைப்புவிடுக்கவில்லை என்று திட்டவட்டமாக மறுத்தார் ஜனாதிபதி வேட்பாளர் அனுரகுமார திஸநாயக்க.

ஜனாதிபதிப்பதவியில் இருந்து கோட்டாபய விரட்டியடிக்கப்பட்டு, மகிந்த ராஜபக்ச உள்ளிட்டோர் வெளியேறிய அரசியல் குழப்பத்தின் போது ஆட்சியைப் பொறுப்பேற்க விடுக்கப்பட்ட அழைப்பை ஏற்காது ஓடி ஒளிந்தவர்கள்தான் சஜித் பிரேமதாஸவும் அனுர குமார திஸநாயக்கவும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனது முதலாவது பரப்புரைக் கூட்டத்தில் தெரிவித்திருந்தார்.

அவரது 8

## ஐரோப்பிய ஒன்றியத்தின்

# தேர்தல் கண்காணிப்பாளர்கள் கொழும்பை வந்தடைந்தனர்

ஜனாதிபதித் தேர்தலைக் கண்காணிப்பதற்காக ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் பொதுநலவாய நாடுகளின் தேர்தல் கண்காணிப்பாளர்கள் குழு இலங்கைக்கு வந்து சேர்ந்துள்ளது. ஞாயிற்றுக்கிழமை இந்தக் குழு கொழும்பை வந்தடைந்தது.

இலங்கை தேர்தல் ஆணைக்குழு விடுத்த அழைப்பை ஏற்று இந்தக் குழுவினர் இலங்கைக்கு வந்துள்ளனர். ஐரோப்பிய ஒன்றியம் இதற்கு முன்னர் ஆறு முறை இலங்கையில் தேர்தல்களை கண் காணித்துள்ளது, 2019 ஜனாதிபதி தேர்தலிலும் அவர்கள் கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர்.

இலங்கையில் நம்பகமான, வெளிப்படையான, அனைவரையும் உள்ளடக்கிய அமைதியான தேர்தல்கள் நடப்பதை உறுதிப்படுத்தும் வகையில் அவர்களின் பணி அமைந்திருக்கும் என்று கண்காணிப்பாளர் குழுவின் தலைவர் கூறினார்.

எதிர்வரும் தேர்தல் நாட்டின் ஜனநாயகத்திற்கு, குறிப்பாக 2022 அரசியல் மற்றும் பொருளாதார நெருக்கடிக்குப் பின்னர், இலங்கையின் மீட்சிக்கு முக்கியமானது 8

## இனி இது ரகசியம் அல்ல!

சாராயக் கடைகளுக்கான அனுமதிப்பத்திர விவகாரத்தை இந்தத் தேர்தலில் ஒரு துருப்புச் சீட்டாகப் பயன்படுத்துவதில் சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச்செயலாளர் தயாசிறீ ஜயசேகர குறியாக இருக்கிறார். இந்த விவகாரத்தை தேர்தல் பரப்புரை மேடைகளில் அவர் பகிரங்கமாகப் போட்டுடைக்கத் தொடங்கியிருக்கிறார்.

போகிற போக்கில் சொல்லிவிட்டுப் போனால் பரவாயில்லை. யார் யாருக்கு எத்தனை எத்தனை சாராயக்கடை அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட்டன என்கிற விடயங்களையும் மேடைகளில் சொல்லத் தொடங்கிவிட்டார் அவர். தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலருக்கும் இப்போது வயிற்றைக் கலக்குகிறது. ஏனெனில் சிங்கள நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலருக்கு முன்னதாகவே ஓடிப்போய் அந்த அனுமதிப் பத்திரங்களை வாங்கியவர்கள் அவர்கள்தான். இத்தனைக்கும் தமிழ்த் தேசியம் பேசும் பெருமகன்களும் தேசத்தின் ஒற்றுமையை திரட்டப்பாடுபடுபவர்களும் அதற்குள் அடக்கம். எங்கே தங்கள் 2

# 6 வேட்பாளர்கள் இடையே ஜனாதிபதி தேர்தல் விவாதம்

### அரியநேந்திரனுக்கும் அழைப்பு

இந்த ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் பிரதான வேட்பாளர்களின் 6 பேர் பங்குபற்றும் நேரடி விவாதமொன்றை நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக தேர்தல் கண்காணிப்பு அமைப்பான 'பவ்ரல்' தெரிவித்துள்ளது.

எதிர்வரும் செப்டெம்பர் ஏழாம் திகதி இந்த விவாதத்தை நடைபெறுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக அந்த அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹன ஹெட்டியாராச்சி தெரிவித்தார்.

இந்த விவாதத்திற்கு ரணில் 2

## மூன்று பொலிஸார் பணி இடைநிறுத்தம்

பகமுன பிரதேசத்தில் காட்டு யானை சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய மூன்று பொலிஸாரும் சேவையில் இருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளனர்.

ஒரு பொலிஸ் சார்ஜென்ட் மற்றும் இரண்டு கான்ஸ்டபிள்களே இவ்வாறு பணி இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளனர் என்று லங்காதீப சிங்களப் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது. பொலன்னறுவை பொலிஸ் நிலைய மூத்த அதிகாரிகளை மேற்கோள்காட்டி இந்தச் செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

யானை சுட்டுக்கொல்லப்பட்டபோது மூன்று பொலிஸ் உத்தியோகத்தர்களும் பக்கமுன பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றியிருந்தனர்.

ஓகஸ்ட் 15 இரவு சுற்றுக் காவல் பணியில் ஈடுபட்டிருந்தபோது இவர்கள் மூவரும் யானையைச் சுட்டுக் கொன்றுவிட்டனர் என்று 8

## ஹரீன், மனுஷவிற்கான பதவிகள் தேர்தல் சட்டங்களை மீறும் செயல்

### பவ்ரல் கண்டனம்: தேர்தல் ஆணைக்குழுவிடமும் முறையீடு

பதவி இழந்த அமைச்சர்கள் இருவரைத் தனது ஆலோசகர்களாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நியமித்திருப்பது தேர்தல் சட்டத்தை மீறிய செயல், பொது நிதியை முறைகேடாகப் பயன்படுத்தும் செயல் என்று கண்டித்துள்ளது தேர்தல் கண்காணிப்பு அமைப்பான 'பவ்ரல்'

வேண்டுமென்றே தேர்தல் சட்டத்தை ஜனாதிபதி மீறியமை தொடர்பில் கடுமையான கவலைகளை எழுப்பியுள்ள சுதந்திரமான மற்றும் நியாயமான தேர்தலுக்கான மக்கள் நடவடிக்கை (பவ்ரல்) அமைப்பு இது குறித்துத் தேர்தல்கள் ஆணைக் குழுவில் 2

### வரலாற்றில் முதல் தடவையாக

## எதிர்க்கட்சிகள் இடையே ஒரு ஜனாதிபதித் தேர்தல்

### சம்பிக்க ரணவக்க கருத்து

ஜனாதிபதித் தேர்தல் வரலாற்றில் முதல் தடவையாக ஆளும் தரப்புக்கும் எதிர்க்கட்சிக்கும் இடையில் போட்டி நடக்கவில்லை, மாறாக எதிர்க்கட்சிகளுக்கு இடையில்தான் அந்தப் போட்டி இடம்பெறுகின்றது 8

## பொது வேட்பாளருக்கு தமிழரிடம் சாதகமான அபிப்பிராயம் இல்லை

### இப்படிச் சொல்கிறார் அமைச்சர் டக்ளஸ்

ஜனாதிபதித் தேர்தலில் நிறுத்தப்பட்டுள்ள தமிழ் பொது வேட்பாளர் குறித்து தமிழ் மக்களிடம் சாதகமான அபிப்பிராயமில்லை என்று மீன்பிடித்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

கிளிநொச்சியில் நேற்றுப் பகல் செய்தியாளர்களிடம் பேசியபோது அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

40 பேர் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட விண்ணப்பித்திருந்தனர். அவர்களில் 39 பேர் போட்டி யிடுகின்றனர். தேர்தல் சுமுகமாக போகும் என்று நம்புகிறேன்.

ஜனாதிபதித் 2

## பெற்றோல் விலை குறையும் தேசிய மக்கள் சக்தி ஆட்சியில்

### அனுரகுமார திஸநாயக்க தெரிவிப்பு

தேசிய மக்கள் சக்தி ஆட்சியில் எரிபொருள்களின் விலைகள் குறைக்கப்படும் என்று வாக்குறுதி வழங்கியுள்ளார் தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளரான அனுரகுமார திஸநாயக்க.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் இலங்கை வங்கி மற்றும் மக்கள் வங்கி ஆகியவற்றிடம் 3 பில்லியன் டொலர் கடன் பெற்றிருப்பதாகவும், 2

## ஜனாதிபதியாக வந்தாலும்கூட சஜித் ஒரே ஆண்டில் அதைவிட்டு ஓடுவார்

### சரத்பொன்சேகா ஆரூடம்

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்று சஜித் பிரேமதாச ஜனாதிபதியானாலும் ஒரே வருடத்திற்குள் பதவியை விட்டுவிட்டு ஓடிவிடுவார் என்று ஜனாதிபதி வேட்பாளரான நாடாளுமன்ற உறுப்பினர் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

கோட்டாபய ராஜபக்ச பதவிக்கு வந்தால் இரண்டே வருடங்களில் பதவியைவிட்டு ஓடுவார் என்று தான் 2

## 30 நாட்களில் ரூ. 5 ஆயிரம் மில். தேர்தல் பரப்புரைக்காகச் செலவு

### கணக்கிட்டுக் காட்டுகிறார் ஜானக ரத்நாயக்க

ஜனாதிபதித் தேர்தலுக்காக 30 நாட்களில் 3 முதல் 5 ஆயிரம் மில்லியன் ரூபாய் வரை தேர்தல் பரப்புரைகளுக்காகச் செலவிடப்பட இருப்பதாக பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவரும் ஜனாதிபதி வேட்பாளருமான ஜானக ரத்நாயக்க தெரிவித்தார். இதில், முதன்மை வேட்பாளர்கள் 2 ஆயிரம் மில்லியன் ரூபாய்கள் வரையில் செலவிட உள்ளனர் என்றும் அவர் தெரிவித்தார்.

களனி ரஜமஹா விஹாரையில் செய்தியாளர்களிடம் 2

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

பெயர்களையும் உச்சரித்து இந்த மனுசன் மானங்கெடுத்துவிடுமோ என்கிற கெடிக்கலக்கத்தில் இருக்கிறார்கள் அவர்கள்.

அதற்குக் காரணம் நேற்று முன்தினம் ஒரு மேடையில் யாழ்ப்பாணத்து நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும்சாராயஅனுமதிப்பத்திரம்வழங்கப்பட்டிருக்கின்றது என்றுதெரிவித்ததயாசிறீஅவர்களின் பெயர் விவரங்களைப் பின்னர் வெளியிடுவேன்என்றுவேறுஅறிவித்திருக்கிறார். மிக அண்மையில் ஜனாதிபதி ரணில் பக்கம் தாவிய தமிழ் முற்போக்குக் கூட்டணி நாடாளுமன்ற உறுப்பினர் வேலு குமாருக்கு 3 சாராய விற்பனை அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட்டன என்றும்

திலும் அமுனுகம, பிரசன்ன ரணதுங்க, லொஹான் ரத்வத்த ஆகியோரும் இந்தப் பட்டியலில் உள்ளனர் என்று அவர் கூறினார்.

திகன, யாழ்ப்பாணம் மற்றும் அனுராதபுர உறுப்பினர்களுக்கு 3 அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டதாகவும் நாடாளுமன்ற உறுப்பினர் திலும் அமுனுகமவுக்கு சரலியத்த மற்றும் கலகெதர ஆகியோருக்கு இரண்டு அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும் நாடாளுமன்ற உறுப்பினர் லொஹான் ரத்வத்தவிற்கு வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரம் அவரது செயலாளருக்கு விற்கப்பட்டுள்ளதாகவும்அவர்தெரிவித்தார்.

தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குக் கொடுக்கப்பட்டசாராயவிற்பனைஅனுமதிப் பத்திரங்களின்எண்ணிக்கையோடு மட்டும்நிற்காமல்அவற்றைஅவர்கள் என்ன விலைக்கு விற்றார்கள் என்கிற விவரத்தையும் தயாசிறி வெளியிட்டால், எம்மவர்கள் மக்கள் பணி செய்த விதத்தை அறிந்துகொள்ள வசதியாக இருக்கும் என்கிறார் என் நண்பர் ஒருவர். அவரது கோரிக்கையை தயாசிறியின்காதுகளில்போட்டுவிடச் சொல்லியிருக்கின்றேன். ஏனென்றால் அனுமதிப் பத்திரம் ஒன்று 2 கோடி முதல் 7 கோடிவரை விலை போயிருப்பதாகச் சொல்லப்படுகின்றது. 7 கோடிக்கு விற்றவர்களைப் பார்த்து 2 கோடிக்கு விற்றவர்கள், அவசரப்பட்டு விட்டோமோ என்று அங்கலாய்த்து வருகின்றனராம். பார்க்கலாம் என்ன நடக்கிறது என்பதை...

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## 6 வேட்பாளர்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விக்கிரமசிங்க, சஜித் பிரேமதாச, அனுரதிஸாநாயக்க,நாமல்ராஜபக்ச, திலித் ஜயவீர, அரியநேத்திரன் ஆகிய வேட்பாளர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

இதனை அனைத்து வானொலி, தொலைக்காட்சி அலைவரிசைகள் மற்றும் சமூக ஊடக வலையமைப்புகள் ஊடாக நேரடியாக ஒளிபரப்புச் செய்யத் திட்டமிடப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

## பெற்றோல்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதனைத் திருப்பிச் செலுத்தும் பொறுப்பை திறைசேரி ஏற்றுள்ளதாகவும் அவர் விளக்கினார். இந்தக் கடனை அடைக்க ஒருலீற்றர்எரிபொருளுக்கு 50 ரூபாய் ஏற்றப்பட்டது. அதிகரிக்கப்பட்ட விலை மூலம் கடன் கிட்டத்தட்ட முழுமையாக செலுத்தப்பட்டாலும், லீற்றருக்கு ரூபாய் 50 வசூலிப்பது தொடர்கிறது. இது பொதுமக்களுக்குப் பெரும் சுமையாக இருக்கிறது.

எனவே தேசிய மக்கள் சக்தி ஆட்சிக்கு வந்ததும் ஒரு முழுமையான மறுஆய்வு நடத்தி, அதன்படி எரிபொருள் விலையை குறைக்கும் - என்று அவர் மேலும் தெரிவித்தார்.

## ஜனாதிபதியாக....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னர்கூறியதுஅப்படியேநடந்தது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

நாடாளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் பொன்சேகாவின் முதலாவது தேர்தல் பரப்புரைக் கூட்டம்கம்பஹாவில்இடம்பெற்றது. அங்கு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

கட்சி சார்பற்ற தலைவர் தேவை என்றுகாலிமுகத்திடலில்போராட்டம் நடந்தது. இப்போதுநான்அவர்களை என்னுடன் சேர அழைக்கிறேன். கட்சி அரசியலில் இருந்து விலகி ஜனாதிபதிதேர்தலில்சுயேச்சையாகப் போட்டியிடுகிறேன். எனவே, கட்சி சார்பற்ற ஒரு தலைவரை நாட்டுக்கு நியமிப்பதற்கான வாய்ப்பு இப்போது மக்களுக்கு கிடைத்துள்ளது.

நாட்டில் பொருளாதாரப் பிரச்சினை உள்ளது அதைத்தீர்க்கக் கூடிய அறிஞர்கள், புத்திஜீவிகள் இருந்தாலும் அவர்களை வழிநடத்தும் நல்ல தலைமை இல்லை. இந்நாட்டின் வருமானத்தைப் பெருக்கி மக்களின் கைகளை வளப்படுத்துவது ஆளும்தரப்பின் பொறுப்பு. எனவே, என்னுடன் சேர மக்களை அழைக்கிறேன் - என்று அவர் மேலும் தெரிவித்தார்.

## ஹரீன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முறைப்பாடும் செய்துள்ளது.

'ஜனாதிபதியின் ஆலோசகர்களாகநியமிக்கப்பட்டஇருவரும்ஜனாதிபதிக்கு ஆதரவாகத் தேர்தல் பரப்புரையில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். இது, தேர்தல் சட்டத்தின் கீழ் தடைசெய் யப்பட்ட வழிகளில் ஒரு வேட்பாளரை ஊக்குவிக்கும் தந்திரோபாய மாகும்' பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹன ஹெட்டியாராச்சி தெரிவித்தார்.

-முன்னாள் அமைச்சர்களான மனுஷ நாணயக்கார மற்றும் ஹரீன்பெர்னான்டோஇருவருக்கும் ஜனாதிபதியின் ஆலோசகர்கள் பதவியை ரணில் விக்கிரமசிங்க வழங்கியது தொடர்பிலேயே அவர் இவ்வாறு குற்றஞ்சாட்டினார்.

'மேலும், இருவருக்குமான வாகனங்கள் உட்பட பலன்கள் பொது நிதியை தவறாக பயன்படுத்துவதாகும்,'என்றுஅவர்குறிப்பிட்டார்.

இதேவேளை, தேர்தல் பரப்புரைகளுக்காக ஐந்து அமைச்சுக்களின் வாகனங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளதாகவும், தேர்தல் சட்டத்தை மீறி அரச நிறுவனங்களில் 14 இடமாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் ஹெட்டியாராச்சி மேலும் சுட்டிக் காட்டினார்.

ஜனாதிபதித்தேர்தலுக்குமுன்னர் இவ்வாறான செயற்பாடுகளை மன்னிக்க முடியாது என அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, இந்த விவகாரம் குறித்து ஐக்கிய மக்கள் சக்தியும் தேர்தல் ஆணைக்குழுவிடம் முறையிட்டுள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தியின் ஊடாகத் தேர்தலில் போட்டியிட்டு நாடாளுமன்ற உறுப்பினர்களான ஹரீன் மற்றும் மனுஷ ஆகியோர் பின்னர் ஜனாதிபதியின் பக்கம் தாவி அமைச்சுப் பதவிகளைப் பெற்றனர். இதையடுத்து அவர்களைக் கட்சியிலிருந்து விலக்கிய ஐக்கிய மக்கள் சக்தி அவர்களின் நாடாளுமன்ற உறுப்பினர் பதவிகளை வெறிதாக்கும்படி கேட்டது. அதற்கெதிராக அவர்கள் இருவரும் நீதிமன்றத்தை நாடினர். வழக்கை விசாரித்த உயர்நீதிமன்றம் அவர்கள் கட்சியிலிருந்து நீக்கப்பட்டமை சரியானதே என்று தீர்ப்பளித்தது. இதனால்அவர்களின்நாடாளுமன்றப் பதவி பறிபோனது. அத்துடன் அமைச்சுப்பதவிகளும்பறிபோயின.

இதையடுத்து.அரசியலமைப்பின் 41(1) சரத்தின் கீழ் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் கீழ் முன்னாள் அமைச்சர்களான ஹரின் பெர்னாண்டோ மற்றும் மனுஷ நாணயக்கார ஆகியோர் ஜனாதிபதியின் ஆலோசகர்களாக நியமிக்கப்பட்டனர்.

விளையாட்டு, காணி மற்றும் சுற்றுலா விவகாரங்களுக்கான ஆலோசகராகஹரின்பெர்னாண்டோ நியமிக்கப்பட்டார், தொழிலாளர் மற்றும்வெளிநாட்டுவேலைவாய்ப்பு தொடர்பான ஆலோசகராக மனுஷ நாணயக்கார நியமிக்கப்பட்டார்.

இப்படிஇவர்கள்இருவரும்ஆலோசகர்ளாகநியமிக்கப்பட்டமைதேர்தல் சட்டங்களை மீறும் செயலாகும் என தேசிய மக்கள் சக்தித் தலைவர் அனுரகுமார திஸாநாயக்கவும் குற்றஞ்சாட்டியுள்ளார்.

தேர்தல் காலத்தில் புதிய நியமனங்களைத் தடுக்கும் வகையில் தேர்தல்கள் ஆணைக்குழு சுற்றறிக்கை வெளியிட்டுள்ளதாகவும், அதையும் மீறி இந்த நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் செய்தியாளர்சந்திப்பில்தெரிவித்தார்.

ஹரீன், மனுஷ ஆகியோர் முன்னர் அமைச்சர்களாக இருந்த அதே அமைச்சுத் துறைகளுக்கான ஆலோசர்களாக அவர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டிருப்பதன் மூலம் இந்த அமைச்சுக்களின் செயற்பாடுகளில்தலையிடுவதற்கும், வாகனங்கள்மற்றும்நிதிகள்போன்ற சலுகைகளைபெற்றுக்கொள்வதற்கும் இடமளிக்கப்பட்டுள்ளதுஎன்றுஅனுர விளக்கினார்.

அகில விராஜ், சாகல ரத்நாயக்க, ஆஷு மாரசிங்க போன்ற ஐக்கிய தேசியக் கட்சியினருக்கு ஆலோசனைப் பதவிகள் ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளன. நவீன் திஸாநாயக்க ஆளுநராக நியமிக்கப்பட்டுள்ளார். இப்படி, அரச நிதியினால் முழு ஐ.தே.க. முகாமும் மகிழ்விக்கப்படுகின்றது என்றும் அவர் குற்றஞ்சாட்டினார்.

ஜனாதிபதி தேர்தல் சட்டங்களை மீறி அரச வளங்கள் மற்றும் நிதியை ஜனாதிபதி தனது தேர்தல் பரப்புரைக்காகத் தவறாக பயன்படுத்துகிறார் எனவும், தேர்தல் ஆணைக்குழுவால் அதனை தடுக்க முடியவில்லைஎனவும்திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

## 30 நாட்களில் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பேசியபோதே அவர் இதனைத் தெரிவித்தார். குறிப்பாக நாடு நெருக்கடியில் இருக்கும் போது தேர்தலுக்காக இவ்வளவு பணம் செலவுசெய்வதுநாட்டுக்குநல்லதல்ல என்று அவர் சாடினார்.

நாடாளுமன்றத்தில் உள்ள 225 உறுப்பினர்களையும் மக்கள் ஏற்கனவே நிராகரித்துவிட்டனர்.

ஆனால், அரசியல்வாதிகள் இன்னமும் மக்களைத் தேர்தல் கூட்டங்களில் திரட்டுவதற்காகப் பணத்தைச் செலவிடுகின்றனர். பல லட்சக்கணக்கான மக்கள் தேர்தல் கூட்டங்கள் மற்றும் பேரணிகளில் கலந்துகொள்கின்றனர். இதற்காகவே இவ்வளவு பெரும் நிதி செலவிடப்படுகின்றது.

தேர்தலில் வாக்காளர் ஒருவருக்காக வேட்பாளர்கள் செலவிடும்தொகை குறித்து தேர்தல் ஆணைக்குழுவில் ஓகஸ்ட் 16 கலந்துரையாடல் நடந்தது.

இதில், ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுனவின் வேட்பாளர் ரூபாய் 300 வாக்காளர் ஒருவருக்காகச் செலவிடப்படும் என்று தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் கூட்டணி வாக்காளர் ஒருவருக்காக 250 ரூபாயைச் செலவிடும் என்று தெரிவிக்கப்பட்டது. சுயேச்சையாகப் போட்டியிடும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் வாக்காளர் ஒருவருக்காக ரூபாய் 250 செலவிடப்படும்என்றுதெரிவித்தார். ஆனால், ஐக்கிய லங்கா பொதுஜன கட்சியின் சார்பில் வேட்பாளர் ஒருவருக்காக ரூபாய் 20 மட்டுமே செலவிடப்படவுள்ளது.

கட்சிகள் ஏற்றுக்கொண் அடிப்படையில் அவற்றின் தேர்தல் செலவுகள், சஜித் பிரேமதாச ரூ. 4.2 பில்லியன் (ஒரு வாக்காளருக்கு ரூ. 250), ரணில் விக்கிரமசிங்க ரூ. 4.2 பில்லியன் (ஒரு வாக்காளருக்கு ரூ. 250), நாமல் ராஜபக்ச ரூ. 5.1 பில்லியன் (ஒரு வாக்காளருக்கு ரூ. 300), அனுரகுமார திஸாநாயக்க ரூ. 3.4 பில்லியன் (ஒரு வாக்காளருக்கு ரூ. 200), மற்றும் ஜனக ரத்நாயக்க ரூ. 340 மில்லியன் (ஒரு வானக்காளருக்கு ரூ.20).

தேர்தல் பரப்புரைக்காகச் செலவிடப்படவுள்ள 3000 -முதல் 5000மில்லியன்ரூபாய்வரையான பணம் இலங்கையின் கடனில் பாதியைஅடைக்கஉதவும். எனவே, வரிசெலுத்தாமல் வேட்பாளர்களின் கணக்குகளில் இவ்வளவு பணம் எப்படிஉள்ளதுஎன்பதைஆராய்வது நல்லது.

40% மக்கள் சாப்பாடு வாங்க முடியாத ஒரு நாட்டில், அரசியலுக்கு இவ்வளவு பெரிய தொகையை செலவிடுவது அபத்தமானது.

இவ்வாறு அவர் மேலும் தெரிவித்தார்.

## பொது....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேர்தலில் தமிழ் பிரதிநிதி ஒருவரை தெரிவுசெய்வதற்குவடக்கு, கிழக்கில் முயற்சிகள் நடைபெறுகின்றன. தமிழ் பொது வேட்பாளர் வடக்கு கிழக்கில் எவ்வாறு செல்வாக்கு செலுத்தப் போகின்றார் என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும். இருந்தாலும் நான் பலருடன் கலந்துரையாடி கிரகித்துக் கொண்டதற்கு அமைவாக, பொது வேட்பாளர் குறித்து மக்கள் மத்தியில் சாதகமானஅபிப்பிராயம்இருப்பதாக தெரியவில்லை.

இன்றுஜனாதிபதிவேட்பாளராகப் போட்டியிடும் ஒவ்வொருவரிடமும் நாட்டைப் பொறுப்பெடுக்கும்படி நெருக்கடியான காலகட்டத்தில் அன்றைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச அழைப்பு விடுத்திருந்தார். ஆனால், ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவைத்தவிரயாரும்முன் வரவில்லை. ரணில் துணிவோடு வந்து ஆற்றலையும், வல்லமையையும் வெளிப்படுத்தினார்.

அன்றிலிருந்து அவருக்கே வெளிப்படையாகஆதரவுதெரிவித்து வந்துள்ளேன். அதேவேளை தமிழ் பேசும் மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைக்கு அவரது காலப்பகுதியில் தீர்வு காணலாம் என்று நினைக்கிறேன்.

அவர் மாத்திரம் வென்று வந்தால் போதாது. அவருடன் சேர்ந்துபபணிக்கக்கூடியவர்களும் வெற்றிபெறவேண்டும்.

ஜனாதிபதி தேர்தல் முடிந்து நடக்கப்போகும் நாடாளுமன்ற தேர்தலிலும்ஈபிடிபிக்கும்கணிசமான வாக்குகளும், ஆசனங்களும் கிடைக்குமாக இருந்தால் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் வெற்றிக்குப் பிறகு எமது மக்கள் நீண்டகாலமாக எதிர்கொண்டுள்ள பிரச்சினைகளுக்கும் குறுகிய காலத்திற்குள் தீர்வு காணலாம் என்று நம்புகிறேன். நான் ரணிலை ஆதரிப்பதற்குஅதுவும்ஒருகாரணம்.

கடந்த காலத்தில் ரணிலுடன் சேர்ந்திருந்த தமிழ்க் கட்சிகள் அதைச் செய்து காட்டவில்லை. தமிழர்தரப்பினரும்தோல்விகண்ட கட்சிகளாகத்தான் தங்களுடைய கொள்கைகளைமுன்வைத்துள்ளனர் எனவும் அவர் தெரிவித்தார்.




# தேசிய ரீதியில் முதலாம் இடத்தை பெற்ற மல்வத்தை வைத்தியசாலையை வாழ்த்தி பாராட்டும் பெருவிழா



(வி.ரி. சகாதேவராஜா)

தொற்றா நோய் சம்பந்தமான கிளினிக் செய்வதில் தேசிய ரீதியில் முதலாம் இடத்தை பெற்ற மல்வத்தை வைத்தியசாலை சமூகத்தை வாழ்த்திப் பாராட்டும்விழாவும் அங்கு சேவையாற்றி இடமாற்றலாகிச் செல்லும் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் ஏஜிசிஎஸ். அங்குளுககா சமத்திற்கான சேவை நலன் பாராட்டு விழாவும் மல்வத்தை பிரதேச வைத்தியசாலையில் நடைபெற்றது.

மல்வத்தை பிரதேச மக்களும் மல்வத்தை பிரதேச வைத்தியசாலை அபிவிருத்தி குழுவினரும் ஏற்பாடு செய்த இந் நிகழ்வு அபிவிருத்தி குழுவின் உபதலைவர் பொன்.நடராஜா தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் டாக்டர் திருமதி நித்மந்தி ரத்னாயக்க தாதிய உத்தியோகத்தர்களான திருமதி ரி.பிரசாந்தி செல்வி யுஎம். லக்ஷாணி ஜயவர்தன, செல்வி என்.நிலக்ஸிகா மற்றும் ஊழியர்கள் வைத்தியசாலை அபிவிருத்தி குழுவினரும் கலந்து கொண்ட னர்.

மல்வத்தைபிரதேச வைத்தியசாலையில் இருந்து இடமாற்றம் பெற்றுகொழும்புதேசிய வைத்தியசாலைக்கு செல்லும் வைத்தியர் சமத்திற்கு பொன்னாடைபோர்த்திநினைவுப் பரிசு வழங்கி பிரியாவிடை விமரிசையாகநடைபெற்றது.

அதேவேளை, உலக வங்கியின் அனுசரணையுடன் இணைந்து இளவயது மரணங்களைதடுக்கும் முகமாக 35 வயதுக்கு 65 வயதுக்கும் இடைப்பட்டவர்களுக்குஇடையேதொடற்றாநோய்களைகண்டறிந்துசிகிச்சை அளிக்கும்முகமாகசெயல்படுத்தப்படும் பிளஸ்பிளஸ்நிகழ்ச்சி திட்டத்தில் குறுகிய கால இடைவேளையில் அதிகளவான சனத்தொகையினரை உள்வாங்கிசெயல்திட்டத்தைதிறம்பட செய்தமைக்காக அகில இலங்கை ரீதியில்மல்வத்தை பிரதேச வைத்தியசாலையானது தங்கப் பதக்கத்தை பெற்று முதலிடத்தை தனதாக்கிக் கொண்டது.

தேசிய மட்டத்தில் முதலாம் இடத்தை பெற்றமைக்காக பாராட்டி கௌரவித்து வாழ்த்து தெரிவிக்கும் நிகழ்வும் இடம்பெற்றது.

வைத்தியசாலை பொறுப்பு தாதிய உத்தியோகத்தர் திருமதி த.பிரசாந்தி 'இந்த நிகழ்ச்சி திட்டத்தை வெற்றிகரமாக எவ்வாறு கொண்டு செல்லப்பட்டது' பற்றிய விரிவான விளக்கம் அனைவருக்கும் மிகத் தெளிவாக வழங்கினார்.

அபிவிருத்தி குழுவின் செயலாளரும் சம்மாந்துறை பிரதேச சபை முன்னாள் உப தவிசாளருமான வெ.ஜெயச்சந்திரன்



பிரதான உரையாற்றினார்.

வைத்தியசாலை பொறுப்பு அதிகாரிக்கு பொன்னாடை போர்த்தி கௌரவித்ததுடன் அவருடைய சேவையை



பாராட்டி அவருக்கு நினைவுச் சின்னமும் மல்வத்தை பிரதேச வைத்தியசாலை அபிவிருத்தி குழுவினரினால் வழங்கப்பட்டது பொதுமக்களும் நிகழ்வில் கலந்து கொண்டனர்.(05)

# பரீட்சைப் பெறுபேற்றை வைத்து அறிவை மதிப்பிடுவது முறையா?

## சேவை நலன் பாராட்டு விழாவில் யோகநாயகன் கேள்வி



(வி.ரி.சகாதேவராஜா)

சமகாலத்தில் மதிப்பெண்களை வைத்து மனித அறிவை மதிப்பிடுகின்றனர். இது முறையா என்ற கேள்வி எழுகின்றது. சுவாமி விவேகானந்தர் கூறியது போன்று எம்மிடம் இருக்கின்ற ஆற்றல்களை திறமைகளை ஆசிரியர்கள் வெளிக் கொணரவேண்டும்.



அதனை அழகேஸ்வரி ஆசிரியை நடைமுறையில் காட்டியுள்ளார். அவரை அன்னமலை சார்பில் மனமார வாழ்த்துகிறோம்.

இவ்வாறு சம்மாந்துறை வலயத்துக்கு உட்பட்ட அன்னாமலை ஸ்ரீ சக்தி வித்தியாலயத்தில் நடைபெற்ற ஆசிரியை திருமதி அழகேஸ்வரி யோகராஜாவுக்கான சேவை நலன் பாராட்டு விழாவில் உரையாற்றிய நாவிதன்வெளி பிரதேச சபை முன்னாள் உறுப்பினரும் அன்னமலை வடபத்ரகாளி அம்பாள் ஆலய நிருவாகியுமான திருமேனி யோகநாயகன் பேசுகையில் குறிப்பிட்டார்.

அன்னமலை ஸ்ரீசக்தி வித்யாலயத்தில் கற்பித்து ஓய்வுபெறும் ஆசிரியை திருமதி அழகேஸ்வரி யோகராஜாவுக்கான சேவை நலன் பாராட்டு விழா நேற்றுமுன்தினம் வித்தியாலய அதிபர் பொன் பாரதிதாசன் தலைமையில் நடைபெற்றது.

விழாவில் பிரதம அதிதியாக சம்மாந்துறை வலய உதவி கல்வி பணிப்பாளர் வீ.ரீ. சகாதேவராஜா கலந்து சிறப்பித்தார். நிகழ்வில் ஆசிரியையின் குடும்பத்தினரும் கலந்து கொண்டனர்.

சமூகஆர்வலர்களும் பெற்றோர் களும், ஆசிரியர்களும், மாணவர்களும் கலந்து கொண்டார்கள்.

விழாவில்பிரதமஅதிதி கூறியவை வருமாறு -

இப்பாடசாலைஅதிபர் பொன்.பாரதிதாசன் இந்த சமூகத்தை உள்வாங்கி இருக்கின்றார். இதுதான் அவரதுவெற்றி.ஆசிரியை திருமதி அழகேஸ்வரி 32 வருட காலம் கல்விச் சேவை ஆற்றியுள்ளார். குறிப்பாகஆரம்பக்கல்விஆசிரியையாக சீரிய பணியாற்றினார். அவர் ஓய்வு பெறுவது இம் மாணவர்களுக்கு ஒரு பேரிழப்பாக கருதலாம். - என்றார்.

சிரேஸ்ட ஆசிரியை திருமதி அற்புத ராஜா நெகிழ்ச்சியாக உரையாற்றினார்.

பாடசாலை அதிபர் ஆசிரியர்கள் பெற்றோர்களால் ஓய்வு பெற்ற ஆசிரியை பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டார். பரிசுகளும் வழங்கப்பட்டன.(05)

# திருமலை மீடியா போரத்தின் 5 ஆவது வருட பூர்த்தியை முன்னிட்டு மேலங்கி வழங்கல்







(எச் எம் ஹலால்தீன், ஹஸ்பர் ஏ.எச்)

திருமலை மீடியா போரத்தின் 5 ஆவது வருட பூர்த்தியை முன்னிட்டு,

புதிய நிர்வாகிகள் தெரிவும், ரீ சேர்ட், ஊடக அடையாள அட்டை வழங்கும் நிகழ்வு கிண்ணியா பீச் ரெஸ்ட் ஹவுஸில் நடைபெற்றது.

திருமலை மீடியா போரத்தின் தலைவர் எச்.எம்.ஹலால்தீன் தலைமையின் கீழ் நடைபெற்றது இந்நிகழ்வில் அதிதிகளாக கிண்ணியா பிரதேச செயலாளர் எம்.எச். எம். கனி, மூதூர் சுகாதார வைத்திய அதிகாரி ஹில்மி முகையதீன் பாவா, சிவில் இன்ஜினியர் ஏ. எஸ்.ஷபான் உட்பட ஊடகவியலாளர்கள்பலர்கலந்துகொண்டனர்.

ஊடகத்துறைல் அண்மையில் ஏற்பட்ட மாற்றங்கள், ஊடகவியலாளர்கள் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுக்க கோவைகள், எவ்வாறான செய்திகளை மக்களுக்கு பகிரவேண்டும், சமூகத்தில் ஊடகவியலாளர்களின் பங்களிப்பு முதலான விடயங்கள் முன்வைக்கப்பட்டன.

இதேவேளை திருகோமலை மாவட்ட ஊடகவியலாளர் அனைவரும் ஒன்று சேர்ந்து சரியான முறையில் செயல்பட வேண்டும் அப்போதுதான் உண்மையான செய்திகளை வெளிப்படுத்த முடியும் என்ற கருத்தை அதிதிகள் முன்வைத்தனர்.

சுமார் 35 ஊடகவியலாளர்கள் அங்கத்துவம் வகிக்கும் திருமலை மீடியா கோரத்தில் ஊடகவியலாளர்களுக்கான மேலங்கி, ஊடக அடையாள அட்டை என்பன வழங்கப்பட்டன.

இதனைத் தொடர்ந்து 2024 ஆம் ஆண்டுக்கான புதிய நிர்வாகத் தெரிவும் இடம்பெற்றது.(05)

காலைக்கதிர் Kalaikkathir

நமது பார்வை
உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: இல.551 A. கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

# அவதானம்

இலங்கை கணினி அவசர தயார்நிலைக் குழு (SL-CERT) போலி இணையத் தளங்கள் ஊடாக தனிப்பட்ட தரவுகள்திருடப்படுவதுஅதிகரித்துள்ளதாகஎச்சரிக்கை விடுத்துள்ளது. இந்த ஆண்டு இணையம் தொடர்பான 2,542 முறைப்பாடுகளில் 414 முறைப்பாடுகள் இவ்வாறான மோசடிகள் தொடர்பானவை என்றும் அது தெரிவித்துள்ளது.

'டிஜிட்டல்' இலங்கை என்கிற எண்ணக்கருவை நோக்கி நாடு வேகமாக முன்னேறிவரும் நிலையில் இந்த அறிவிப்பு அபாயகரமான முன்னறிவிப்பாகவும் மக்கள் எச்சரிக்கையோடு, தமது தகவல் பாதுப்பில் அதிக கவனம் செலுத்த வேண்டியவர்களா இருப்பதன் அவசியத்தை உணர்த்துவதாகவும் உள்ளது.

இணையப் பயனர்கள் சந்தேகத்திற்கிடமான இணையதளங்களைத் தவிர்க்கவும், தேவையற்ற இணைப்புகளைக் கிளிக் செய்வதைத் தவிர்க்கவும் கணினிஅவசரதயார்நிலைக்குழுஅறிவுறுத்துகின்றது.

மோசடிகளைத் தவிர்க்க அதிக ஆன்லைன் விழிப்புணர்வின் அவசியத்தையும் அது வலியுறுத்தியுள்ளது. ஆனால், அத்தகைய விழிப்புணர்வு நடவடிக்கைகள் எடுக்கப்படுவதை ஊக்கப்படுத்த வேண்டிய ஆளும் தரப்பு அது தொடர்பில் எந்தவித நடவடிக்கையையும் எடுக்காது இருப்பது கவலைக்குரியது.

வெளிநாடுகளில் இருந்து வந்து இங்கு தங்கியிருந்து மோசடிகளில் ஈடுபடுகிறார்கள். அப்படி மோசடியில் ஈடுபட்டார்கள் என்கிற குற்றச்சாட்டின் கீழ் நூற்றுகணக்கான வெளிநாட்டவர்கள் அண்மையில் கைது செய்யப்பட்டார்கள். அவர்கள் அனைவருமே தமது நாடுகளைவிட்டு இலங்கைக்கு வந்து தங்கியிருந்துஇந்தமோடியில்ஈடுபட்டுள்ளனர். கணினி மற்றும் இணைய இணைப்பு மட்டும் அவர்களுக்குப் போதுமானதாக இருந்துள்ளது.

மீனுக்குத் தூண்டில் போடுவது போன்று பரிசு விழுந்திருக்கிறது, பெருந்தொகைப் பணம் கிடைக்கவுள்ளது என்று ஆசை வார்த்தைகாட்டிப் பணத்தை மோசடி செய்வது அல்லது கடன் தருகின்றோம், பணம் வந்துள்ளது என்று தெரிவித்து தனிப்பட்ட தரவுகளைப் பெற்று அவற்றைக்கொண்டு வங்கிக் கணக்குகளில் மோசடி செய்வது என்று இவர்கள் பல்வேறு விதமான நிகழ்நிலை மோசடிகளில் ஈடுபட்டமையும் கண்டறியப்பட்டுள்ளது. நூற்றுக்கணக்கானவர்கள்கைது செய்யப்பட்டபோதும் இதுபோன்ற மோசடிகளும் மோசடிகளுக்கான முயற்சிகளும் தொடர்ந்த வண்ணமே உள்ளன. இது மோசடிக்காரர்கள் மேலும் பலர் வெளியில் உலவிக் கொண்டிருக்கிறார்கள் என்பதைக் காட்டுகின்றது.

இணையத்தளமோசடியில்வெளிநாட்டவர்கள்மட்டும் ஈடுபடுவதில்லை. உள்நாட்டவர்களும்ஈடுபடுகின்றார்கள். எனினும் அவர்கள் தொடர்பில் போதியளவு கவனம் செலுத்தப்படவில்லை. அதற்கேற்ற வகையில் சட்டங்களும் வலுப்படுத்தப்படவில்லை. தேவையான புதிய சட்டங்களும் உருவாக்கப்படவில்லை.

இத்தகைய பலவீனமான சூழலில் இலங்கையை டிஜிட்டல்மயப்படுத்துவது மிகவும் ஆபத்தானது. எனவே மக்களுக்கு இது தொடர்பில் விழிப்புணர்வூட்டுவது மிகவும் அவசியம். அதற்கான நடவடிக்கைகளை அரசு துரிதப்படுத்தவேண்டும்.



# அனுபவமே சிறந்த ஆசான்

**இராதாகிருஷ்ணன்**

அறிவைஅனுபவத்தின்மூலம்,காலம்,இடம்,சூழல் அறிந்துமுயற்சியுடன்பயன்படுத்திக்கொள்கிறவர்களே வாழ்க்கையில் வெற்றியடைகிறார்கள்.

அறிவானது, இயற்கை அறிவு, உணர்வறிவு, படிப்பறிவு, கல்வியறிவு, தொழில்சார் அறிவு, துறைசார் அறிவு, அனுபவ அறிவு, பொது அறிவு, ஆழ்மனப் பதிவறிவு என பல்வேறு வகையாக சான்றோர்கள் பிரித்துள்ளனர். கல்வி அறிவு அனுபவம் - புரிதல் செயல்படுதல் எனும் கூறுகள் மனித குலத்திற்கு பொதுவானவை.

'அறிவு என்பது திணிக்கப்படும் ஒன்றல்ல. திணிக்கப்படும் கல்வி, கேள்வி கேட்க இயலாமல் ஒடுங்கிப் போகும் மனிதர்களையே உருவாக்குகிறது' என்றார் பௌலோ பிரையர் எனும் அறிஞர். அதே சமயத்தில், மணம் மிக்க மலர்களை நாடும் தேனீக்களைப் போல, அனுபவ அறிவானது ஞானப் பொக்கிஷங்களாகவிளங்கும்கற்றறிந்தஞானிகளைத் தேடிப் பிடித்து அவர்களுடன் பழகுவதால் கிடைக்கப் பெறுவது.

மனிதனுக்குஅரியபெருமையைத்தருவதுஅறிவு. அந்தஅறிவுடன்அனுபவமும்சேர்ந்துவிட்டால்,பொன், பொருள் இல்லையென்றாலும் பெருமையுண்டாகும். வாழ்க்கையில் நாம் செய்யும் செயல்களின்போது குழப்பம்ஏற்பட்டாலோ,அல்லதுசரியானதகவலையும், உரிய தெளிவையும் பெற வேண்டுமென்றாலும், எடுத்தேன், கவிழ்த்தேன் என்று முடிவு செய்தால் அது தீங்கையே விளைவிக்கும். அந்நிலையில், அதே போன்ற சூழ்நிலைகளைக் கையாண்டு




வெற்றியடைந்தவர்களிடம் அவர்கள் அனுபவம் பற்றிக் கேட்டுத் தெரிந்து கொள்வது பயனுள்ளதாக இருக்கும்.

தவறானஅனுபவம்என்றும்தீங்குவிளைவிக்கும். நெருப்பு சுடும் என்பதும், நீர் குளிரும் என்பதும், மின்சாரம் ஆபத்து என்பதும் நம் அனுபவங்கள் மூலமாகக் கற்றுக் கொண்டிருக்கிறோம். ஆபத்து ஏற்படும் முன் நாம் முன்னெச்சரிக்கையுடன் செயல்பட நமக்கு அனுபவ அறிவே கை கொடுக்கிறது.

'அனுபவம் ஒரு விலை உயர்ந்த நகை. அதை கூடுதல் விலை கொடுத்தேனும் வாங்க வேண்டும்' என்கிறார் ஷேக்ஸ்பியர். அனுபவ அறிவை வளர்த்துக் கொள்கிறவர்களுக்கே மனப் பக்குவம் எளிதாய் வாய்க்கும். அனுபவம் வாய்ந்தவர்களின்வாய்ச்சொல்லானதுசமுதாயத்தின் ஒழுக்கத்திற்கும் ஆரோக்கியத்திற்கும் வளர்ச்சிக்கும் ஊக்க மூலிகையாக விளங்குகிறது. எனவேதான், கல்வி என்பது புத்தகங்களிலிருந்து மட்டுமல்ல, அனுபவத்திலிருந்தும் பெறப்படுகிறது.

கல்வி என்பதை வகுப்பறைகளுக்குள் மட்டுப்படுத்தக் கூடாது. அது வாழ்க்கையின் ஒவ்வொருஅனுபவத்திலிருந்தும்பெறப்படவேண்டும் என்கின்றனர் சான்றோர். பக்கம் பக்கமாகப் படித்த பாடங்கள்காலவெள்ளதில்கரைந்துமறந்துபோகலாம். ஆனால், அனுபவம் மூலம் நாம் பெற்ற அறிவானது பசுமரத்து ஆணி போல மனதில் பதிந்திருக்கும்.

நம் முன்னோர்களும், அறிஞர் பெருமக்களும் பல்வேறு வகைகளில் அவரவர்கள் கல்வி, கேள்விகளில்பெற்றஅனுபவங்களை,ஆற்றல்களைப் புத்தகங்களாக எழுதி வைத்துள்ளார்கள்; பேசிய அனுபவமொழிகளைநம்மனங்களிலும்,நூல்களிலும் பதிய வைத்துள்ளார்கள். வாழ்க்கையின் உண்மை லட்சியத்தை அறிந்த நல்லோர்கள், சமுதாயத்தின் தகைசான்ற சான்றோர்கள் தாமும் பேரானந்தத்தின் சாரத்தை அனுபவித்ததுடன், பிறருக்கும் மகிழ்வூட்டி அனுபவிக்கச் செய்கின்றனர். ஒளிரும் தீப்பந்தத்தை மற்றவர்களுக்குக்கொடுப்பதைப்போலஅனுபவத்தால் தோய்ந்த பெரியோர்கள், அவர்கள் கற்றறிந்ததை நமக்குப் போதிக்கிறார்கள்.

அனுபவ அறிவு என்பது தனி மதிப்புக் கொண்டது. ஒவ்வொரு அனுபவத்தின் முடிவிலும் நாம் சிறந்த பாடத்தைக் கற்றுக் கொள்கிறோம். 'இனி இம்மாதிரி

தொடர்ச்சி 5ம் பக்கம்...........

# அனுபவமே சிறந்த ஆசான்

4ம் பக்க தொடர்ச்சி...........

செய்யக் கூடாது அல்லது இன்னது போலச் செய்ய வேண்டும்' என உணர்ந்து தெளிகிறோம். மற்றவர்களையும் இம்மாதிரியான சூழ்நிலைகளில் எச்சரிக்கையாக இருக்க அறிவுறுத்துகிறோம். நாம் பெற்ற அனுபவங்களும், அனுபவம் பெற்றவர்கள் சொல்லும் கருத்துகளும், பாடங்களும், அறிவுரைகளும் நம்மை நாளும் வழி நடத்தும் கருவிகளாகும்.

அனுபவம் கற்றுத் தரும் பாடம், தவறுகளையும் குறைக்கும். எனவேதான் அனுபவத்தால் அறிய முடியாததை, ஆயிரம் தத்துவ ஞானிகளாலும் அறிய முடியாது என்றனர் முன்னோர். எவரொருவர் தன் அறியாமையை அனுபவத்தின் மூலம் அறிந்து கொள்கிறானோ அவரே பின்னர் அறிவாளியாகிறார்.

பாடசாலையில் கல்வியைப் பெற்று, அதை நுகர்ந்துதான் பாடங்களைத் அறிந்து கொள்ள வேண்டுமென்றால் அதற்குக் காலம் போதாது. எனவே தான், 'வாழ்வு சிறிது வளர்கலை பெரிது' என்றனர் பெரியோர். நாம் செய்யும் செயல்களை திறம்படச் செய்ய வேண்டுமென்றால் அதற்குரிய அறிவு மட்டும் போதாது, அனுபவமும் தேவைப்படுகிறது. இதன் மூலமே நாம் செய்யும் செயல்களில் திறன் கூடுகிறது.

அனுபவ அறிவானது பயிற்சி மற்றும் முயற்சியுடனேயே கிடைக்கப் பெறுகிறது. பள்ளிப் படிப்பு இல்லாதவர்களும், குறி இலக்கும், குறிகோளும் கொண்டு, பிறரது அனுபவங்களிலிருந்து பாடங்களைக் கற்று, சோதனைகளையெல்லாம் தவிடுபொடியாக்கி நாட்டின் தலைவராகவும், சாதனையாளராகவும் மிளிர்வதை

நாம் இப்போதும் காண்கிறோம். அரசியல், விளையாட்டுத் துறையையும், திரைத் துறையையும், கலைத் துறையையும் இதற்கு உதாரணமாகக் கூறலாம்.

வாழ்க்கை முழுவதுமே அனுபவ அறிவு, நம் நிழல் போல் பின் தொடர்ந்து வந்து துன்பக் காலத்தில் உதவுகிறது. வாழ்க்கையில் நாளும் நாம் பெறும் அனுபவமே மனிதனுக்கு நல்ல பாடத்தைக் கற்றுத் தரும் குருவாகிறது. பிறர் சொல்வதால் பெறுகின்ற அறிவை விட, செயல் வழியில் அனுபவத்தின் மூலம் பெறுகின்ற அறிவே என்றும் நிலைத்து நிற்கும். நம் வாழ்க்கைப் பாதையில் வழிகாட்டும் கைவிளக்காக ஒருவரின் அனுபவமே நமக்கு உதவுகிறது.

# அடியார்களுக்கு அமுதளித்த அன்பர்களுக்கு அன்புமடல்











(வி.ரி. சகாதேவராஜா)

கடந்த சனிக்கிழமை இந்துமத எழுச்சியாக இடம்பெற்றகாரைதீவு - மண்டூர் மாபெரும் பாதயாத்திரையின் போது வழிநெடுகிலும் அமுதளித்த சைவ அன்பர்களுக்குகாரைதீவு இந்து சமய விருத்திச் சங்கம் தமது மண் சார்பில் நன்றிகளைத் தெரிவித்துள்ளது.

இம் மாபெரும் பாத யாத்திரையில் சுமார் 4000 அடியார்கள் பக்தி பூர்வமாக பங்கேற்றனர்.

அவர்களுக்கு கல்முனை முருகன் ஆலயம் தொடக்கம் மண்டூர் வரை தாராளமாக பழரசம் தொடக்கம் அமுது வரை வழங்கினார்கள்.

குறிப்பாக காலை ஆகாரத்தை கிட்டங்கி பிள்ளையார் ஆலயத்தில் முன்னாள் கல்முனை மாநகரசபை உறுப்பினர் கே.செல்வராசா குடும்பத்தினரும் மதிய ஆகாரத்தை பிரபல சட்டத்தரணி நடராசா சிவரஞ்சித் மற்றும் அவரது சகோதரர் ஜீவராஜா (லண்டன்) குடும்பத்தினரும் வழங்கியிருந்தனர். அவர்களுக்கு நன்றிமடலும் வழங்கி வைக்கப்பட்டது.

நாவிதன்வெளி பிரதேசத்தில் ரூபசாந்தன் குடும்பத்தினர் நீராகாரம் வழங்கினார்கள். ஸ்பான்ட் அமைப்பு உள்ளிட்ட பல்வேறு பிரமுகர்கள் வழங்கினார்கள். அனைவருக்கும் நன்றிகள் தெரிவிக்கப்பட்டுள்ளது.(05)

குறிஞ்சி மலை நகர் Kurinchi Hill City
கொழும்பு - மட்டக்களப்பு A4 வீதியில் 190 ஆவது km இல் 800 m தூரத்தில்
பதுளை மாவட்டம் ஹல்துமுல்லை பிரதேச செயலர் பிரிவு
15 பேர்ச் முதல் 40 பேர்ச் வரையான காணித்துண்டுகள் விற்பனைக்கு!
சுற்றுலா விடுதி, விடுமுறை வீடு ஆகியவற்றுடன் தேயிலை, கோப்பி, கறுவா பயிர்ச்செய்கையும்
அருகில் உள்ள சுற்றுலா மையங்கள்
(100கிமீ சுற்றுவட்டாரத்தில்)
பம்பரகந்த, தியலும, துன்கிந்த, இராவணா, ரம்போடை உட்பட 10இற்கும் மேற்பட்ட நீர்வீழ்ச்சிகள்
தேசிய சரணாலயங்கள் மற்றும் பூங்காக்கள்
Horton Plains National Park, Hakgala Botanical Gardens
Victoria Park, Kande Ela Educational Forest Park
Lunugamvehera National Park, Yala National Park
Udawalawe National Park
கதிர்காமம் முருகன் கோவில், சீதா அம்மன் ஆலயம், ரம்போடை ஆஞ்சநேயர் கோவில்

தனியான வாகன தரிப்பிட வசதி
முழுமையான 24 மணிநேர பாதுகாப்பு சேவை
தொடர்ச்சியான பராமரிப்பு ஏற்பாடு
மின்சார இணைப்பு ஏற்பாடு - குடிதண்ணீர் வசதி
உணவகம் - உள்ளக விளையாட்டுத்திடல்
தேயிலை, கோப்பி, கறுவா தொழிற்சாலைகள்
சுற்றுலா ஏற்பாடுகள்
பேர்ச் 200,000/-
பரப்பு 20 இலட்சம்
தொடர்புகளுக்கு: 0777 43 5557
5th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd



கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இந்த விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee
Chikne Fried Rice with Vegetable
Kothu Rotty With Vegitable In Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad
Ice Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swohpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

# மாகாண மட்டத்துக்குத் தெரிவு

(எம் சியாஜ் )

புத்தளம் வலய மட்ட தமிழ் மொழிதின பாவோதல் போட்டியில் மூன்றாம் பிரிவில் முதலாம் இடத்தை கற்பிட்டி அல் அக்ஸா தேசிய பாடசாலையில் தரம் 08 இல் கல்வி பயிலும் மாணவன் ஐ.எம் இனான் பெற்றுள்ளதுடன் மாகாண மட்டத்திற்கும் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இவர் கற்பிட்டி பெரிய குடியிருப்பு ஜும்ஆ பள்ளிவாசல் வீதியில் வசிக்கும் எம்.ஐ இப்திகார் மற்றும் எம்.ஜீ பஜ்ரியா தம்பதிகளின் புதல்வர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

(05)

# யாழில் வேலைக்குச் சென்ற இளைஞன் பரிதாபச் சாவு

யாழ்ப்பாணத்தில் வேலைக்குச் சென்ற இளைஞன் திடீரென நெஞ்சு வலி ஏற்பட்டு உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணம், நீர்வேலி பகுதியை சேர்ந்த தவராசா ரகுமாதவா (வயது 32) என்ற இளைஞரே உயிரிழந்துள்ளார்.

வீட்டிலிருந்து ஞாயிற்றுக்கிழமை காலை வேலைக்கு சென்ற நிலையில், வேலைத்தளத்தில் நெஞ்சு வலிப் பதாக கூறியதையடுத்து, சக தொழிலாளர்கள் அவரை கோப்பாய் வைத்தியசாலைக்கு அழைத்துச் சென்றவேளை, அவர் ஏற்கனவே உயிரிழந்துவிட்டார் என வைத்தியர்கள் அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

மேலும், உயிரிழப்புக்கான காரணம் தெரியவராத நிலையில், சடலம் உடற்கூற்று பரிசோதனைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

(05)

# யாழ். கடலில் 100 அடி ஆழத்தில் கடலட்டை பிடித்தவர் உயிரிழப்பு

யாழ்ப்பாண கடலில் சுமார் 100 அடி ஆழத்தில் கடலட்டை பிடித்துக்கொண்டிருந்த நபர் திடீரென நெஞ்சுவலி ஏற்பட்டு உயிரிழந் துள்ளார்.

புத்தளம் பகுதியைச் சேர்ந்த சேவுதாதின் முகமதுதாவீன் (வயது 40) என்பவரே உயிரிழந்துள்ளார்.

வடமராட்சி கிழக்கு, நாகர்கோவில் கடற்பகுதியில் சிலிண்டரை பயன்படுத்தி சுமார் 100 அடி ஆழத்தில் கடலட்டை பிடித்துக்கொண்டிருந்த வேளை, நெஞ்சு வலிப்பதாக கூறி, கடலின் மேல் பகுதிக்கு வந்துள்ளார்.

அதனை அடுத்து சக தொழிலா ளிகள் அவரை பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சேர்த்த நிலையில், அங்கிருந்து யாழ். போதனா வைத்தியசாலைக்கு கொண்டு சென்ற வேளை அவர் உயிரிழந்துள்ளார்.

(05)

# முஸ்லிம் மீடியா போர உறுப்பினர்களுக்கு நியமனக் கடிதங்கள் வழங்கி வைப்பு











(எம். எப். றிபாஸ்)

ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் 2024/25 ஆம் ஆண்டுகளுக்காக தெரிவு செய்யப்பட்ட புதிய நிறைவற்று குழுவினருக்கும் புதிதாக தெரிவு செய்யப்பட்ட ஆலோசகர்கள் மற்றும் மாவட்ட இணைப்பாளர்களுக்கும் இடையிலான அறிமுக கூட்டமும் நியமனம் வழங்கும் நிகழ்வும் கொழும்பு ஸ்ரீலங்கா ஜமாஅதே இஸ்லாமி தலைமையக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

அமைப்பின் தலைவர் என்.எம்.அமீன் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்திற்கு மாவட்டங்களை பிரதிநிதித்துவப்படுத்தி மாவட்ட இணைப்பாளர்கள், ஆலோசகர்கள், நிருவாகக்குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டு எதிர் காலத்தில் மீடியா போரத்தால் மேற்கொள்ளப்பட வேண்டிய திட்டங்கள் தொடர்பாக பலரும் கருத்துக்களைத் தெரிவித்தனர்.(05)



காலைக்கதிர் Kalaikkathir

## எதிர்க்கட்சிகள் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்று தெரிவித்தார் நாடாளுமன்ற உறுப்பினர் சம்பிக்க ரணவக்க.

ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாசவிற்கு ஆதரவு தெரிவித்து நடந்த கூட்டத்தில் உரையாற்றும்போது அவர் இதனைத் தெரிவித்தார். ருவன்வெல்லவில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

2019ஆம்ஆண்டுஊடகங்களில் நாடகம்ஆடியேகோத்தபாயராஜபக்ச வெற்றிக்கு கொண்டுவரப்பட்டார், நாட்டின் தேசிய பாதுகாப்பு ஆபத்தில் உள்ளது, படித்தவர்கள் நாட்டுக்குத் தேவை, நாட்டில் எங்கும் குண்டுவெடிப்பு அச்சம் என்றார்கள். கடைசியில் சித்த மருத்துவம்கேலிக்கூத்தாக்கப்பட்டு, ஒரு போலித் தேனைக் கொண்டு வந்து முப்பதாயிரம் பேரை கொவிட் நோயால் கொல்ல ஏற்பாடு செய்யப்பட்டது. உரத்தைப் பயன்படுத்தவேண்டாம் என்று சொல்லி, நமது நெல் விவசாயம், தேயிலை விவசாயம், ரப்பர் விவசாயம் என்பவற்றை அழிக்க முனைப்புக் காட்டப்பட்டது. மூன்று வேளையும் உண்ணும் மக்கள் ரொட்டியும் உப்பும் மிளகாயும் உண்ணும் இடத்திற்கு ராஜபக்சக்களால் தள்ளப்பட்டார்கள்.

ஒரு தற்பெருமைக்காரன் எண்ணெய்க் கூட்டுத்தாபனத்தை கைப்பற்றிஇந்தநாட்டில்எண்ணெய் வரிசைகளை உருவாக்கி மக்களை எண்ணெய் வரிசையில் இறக்க வைத்தது உங்களுக்கு நினைவிருக்கிறதா? பதினான்கு மணி நேரம் மின்வெட்டு. திஸ்ஸ விதாரணவுடன் இணைந்து 'விதுலமுலங்கா' வேலைத்திட்டத்தின் கீழ் ஒவ்வொரு கிராமத்திற்கும் மின்சாரத்தை வழங்கியவர்கள் நாங்கள். ஆனால் ராஜபக்சக்கள் ஆட்சி மக்களுக்கு மின்சார இணைப்பைத் துண்டித்தது.

அத்துடன் இந்நாட்டு முதலாளிகளுக்கு பெரும் வரிச்சலுகைகள் வழங்கப்பட்டு நாட்டின் வருமானத்தை பூஜ்ஜியமாகக் குறைத்து நாட்டை திவாலாக்கியது. 1815ஆம் ஆண்டு மார்ச் 2 போலவே ஏப்ரல் 12, 2022 நமது வரலாற்றில் மிகவும் இருண்ட தருணம் என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

ஏன் நமது இறையாண்மையை வெளிநாட்டுக் கடன்காரர்களிடம் அடகு வைக்கப்பட்டது. அந்த வெளிநாட்டுக் கடன்காரர்கள் இஷ்டம்போல் ஆடும் நாடாக இன்று இந்த நாடு மாற்றப்பட்டுள்ளது. எனவே எதிர்வரும் செப்டெம்பர் 21 இரண்டாம்சுதந்திரப்போராட்டத்தின் ஊடாகஇந்நாட்டின்சுதந்திரத்திற்காகப் போராட்டம் இடம்பெறும். நாட்டின் சுதந்திரத்திற்காக உங்கள் வாக்கை அளியுங்கள்.

இன்று இந்த நாடு திவாலாகி, இறையாண்மை பறிக்கப்பட்டு, மக்கள் வறுமையில் வாடுகிறார்கள், தொழிலதிபர்கள், மக்கள், இளைஞர்கள்தங்கள்எதிர்காலத்தை இழந்துள்ளனர். பொருளாதார நெருக்கடியை ஏற்படுத்தியவர்கள் என்று உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்த மஹிந்த ராஜபக்ச.கோத்தபய ராஜபக்ச, பசில் ராஜபக்ச ஆகியோர் இன்னும் தண்டிக்கப்படவில்லை. இந்தத் தேர்தல் மூலம் மக்கள் மகிந்தவுக்கு நல்ல தண்டனையை வழங்கலாம். செப்டெம்பர் 21 நாமலைத் தோற்கடிப்பதன் மூலம் அந்தத் தண்டனையை வழங்கவேண்டும். அப்படித்தான் 1931 ஆரம்பித்த ஓகொல்லன் குடும்ப அரசியலை செப்டெம்பர் 21 துடைத்தெறியவேண்டும்.

எந்த அனுபவமும் இல்லாத, நிர்வாக அறிவும் இல்லாத, தேசிய மக்கள் சக்தி என்று கூறிக்கொள்ளும் ஜே.வி.பி.யின் முகமூடியை கிழிப்பதற்கும் இந்த ஜனாதிபதித் தேர்தலைப் பயன்படுத்தவேண்டும். இந்தத் திசைகாட்டி புதியதல்ல. ஜே.வி.பி. புதியதல்ல. ஜேவிபி என்னை விட மூத்தது. இரண்டு கிளர்ச்சிகள் நடந்துள்ளன. குருதி ஆறுகள் ஓடின. இளம் தலைமுறையினர் தங்கள் வாழ்க்கையை இழந்துள்ளனர். பல்லாயிரக்கணக்கான மக்கள் நாட்டை விட்டு வெளியேற்றப் பட்டுள்ளனர்.

இன்றுகலாநிதி,பேராசிரியர்,அந்த அறிஞர், இந்த அறிஞர் என முகமூடி அணிந்து வருகின்றனர். அதே முகமூடியைதான் கோட்டாபயவும் போட்டிருந்தார் அதை நினைவில் வைத்துக்கொள்ளுங்கள் - என்றார்.

## மூன்று....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

துப்பாக்கிச்சூட்டில் காட்டுயானை சம்பவ இடத்திலேயே உயிரிழந்தது. யானையின் இறப்புத் தொடர்ப்ல் இந்த மூன்று பொலிஸாரும் பிரதேச வனவிலங்கு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட பொலிஸார் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டபோது அவர்களுக்குப் பிணை வழங்கப்பட்டது.

## தேர்தல்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

ஐரோப்பிய ஒன்றிய பார்வையாளர் பணி பல்வேறு குழுக்களை உள்ளடக்கியது. பிரதி பிரதான கண்காணிப்பாளர் மற்றும் ஒன்பது தேர்தல் நிபுணர்கள் அடங்கிய பிரதான குழுவொன்று ஏற்கனவே கொழும்பு வந்துள்ளது.

அவர்களுடன் 26 நீண்ட கால கண்காணிப்பாளர்களும் இணைந்து நாடு முழுவதும் தேர்தல் நடவடிக்கைகளைக் கண்காணிப் பார்கள்.

பின்னர், தேர்தல் வாரத்தில் 32 குறுகிய கால கண்காணிப் பாளர்களும் இலங்கை முழுவதும் அனுப்பப்படுவார்கள்.

## ஆட்சியைப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கருத்தை மறுத்த அனுர, செய்தியாளர்களிடம் பேசியபோது, இவ்வாறான கருத்துக்களை முன்வைக்கும்போது ஜனாதிபதியின் கௌரவத்தையும் பொறுப்பையும் பேண வேண்டியதன் முக்கியத் துவத்தை வலியுறுத்தினார்.

'தேசிய மக்கள் சக்தியை ஆட்சியமைக்க வரும்படி கோத்தபாயவோ அல்லது மஹிந்த ராஜபக்சவோ அழைக்கவில்லை என்பது அனைவரும் அறிந்ததே. அதற்காக நாங்கள் ஆச்சரியப்படவில்லை, வெளிப்படையாக, நாங்கள் ஒருபோதும் அழைப்பை எதிர்பார்த்ததுமில்லை' என்று அவர் கூறினார்.

'தேசிய மக்கள் சக்தி ஆட்சியைப் பிடித்தால்,இந்தநாட்டில்ஊழல்மற்றும் மோசடிகள் அம்பலப்படுத்தப்படும், அதற்குப் பொறுப்பானவர்கள் பொறுப்புக்கூறவேண்டியி-ருக்கும் என்பது அவர்களுக்குத் தெரியும்,' என்றும் அவர் குத்திக்காட்டினார்.

இலங்கை மக்கள் விழிப்புடன் இருக்குமாறும் உண்மையான மக்கள் ஆட்சியைப் அமைப்பதற்குக் கிடைத்துள்ள சிறந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ளுமாறும் அவர் அழைப்பு விடுத்தார்.







## மீராவோடையில் வீட்டுக்கு தீ வைப்பு









(எச்.எம்.எம்.பர்ஸான்)

வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மீராவோடையிலுள்ள வீடொன்றுதீப்பற்றியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் நேற்று (திங்கட்கிழமை) அதிகாலை 3 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

வீட்டிலுள்ளோர் தூங்கிக் கொண்டிருந்த போது திடீரென வீடு தீப்பற்றியதைக் கண்டு கூக்குரல் இட்டதைத் தொடர்ந்து அயலவர்கள் தீப்பரவலை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்துள்ளனர்.

ஓட்டமாவடி-மீராவோடை-4 ஆம் வட்டாரம் நூரானியா வீதியிலுள்ள வீடொன்றே இவ்வாறு பகுதியளவில் தீப்பற்றியுள்ளது.

தீப்பரவலை அணைக்கச் சென்ற நபர்களுக்கு சிறு காயங்கள் ஏற்பட்டுள்ளதுடன், வீட்டிலுள்ள மின்சாரப் பொருள்கள், தளபாடங்கள் பல தீயில் கருகியுள்ளன.

இந்தச் சம்பவம் திருடன் ஒருவனால் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக வீட்டார் சந்தேகம் தெரிவிக்கின்றனர்.

குறித்த வீட்டில் சுமார் ஒரு வாரத்துக்கு முன்னர் திருடன் ஜன்னல் வழியாக வந்து அங்கிருந்த பணத்தை திருடிச் சென்றுள்ளான்.

இந்நிலையில், நேற்றையதினம் திருடன் வீட்டின் மேல் பகுதியில் பொருத்தப்பட்டிருந்த பொலித்தீன் வழியாக உட்செல்ல அதற்கு தீ வைத்ததில் இந்த சம்பம் இடம்பெற்றிருக்கலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன், தீப்பிடிப்பதை கண்டு வீட்டார் எழுந்த போது வீட்டிலிருந்து திருடன் ஓடிச் சென்றதை கண்டுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வாழைச்சேனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)




# சதுரங்க போட்டியில் கிண்ணியா மாணவன் கிழக்கு மாகாண மட்ட போட்டியில் வெற்றி



திருகோணமலை, தி/கிண்ணியாஃ அல் அஸ்ஹர் வித்தியாலயத்தில் தரம் 3 இல் கற்று வருகின்ற ஆக்கிஸ் ரயான் என்ற மாணவன் இலங்கை பாடசாலைகள் சதுரங்க சங்கத்தினால் நடத்தப்பட்ட 2024 ஆம் ஆண்டுக்கான பாடசாலைகள் தனிநபர் செஸ் சாம்பியன்ஷிப் போட்டியில் பங்குபற்றி மாகாண மட்டத்தில் வெற்றியீட்டியுள்ளதோடு தேசிய மட்டப் போட்டிக்கும் தெரிவாகி இப்பாடசாலைக்கும் கிண்ணியா மண்ணுக்கும் பெருமை சேர்த்துள்ளார்.

அவருக்கும் அவரது பெற்றோருக்கும் பாடசாலை சார்பாகவும் கிண்ணியா மண் சார்பாகவும் மனம் நிறைந்த வாழ்த்துக்களை தெரிவிப்பதோடு தேசிய மட்டப் போட்டியிலும் வெற்றிவாகை சூடி இம்மண்ணுக்கு மேலும் பெருமை சேர்க்க பாடசாலை சமூகம் வாழ்த்துகின்றனர்.(05)

# குப்பைகளால் சூழ்ந்துள்ள இராவணன் நீர்வீழ்ச்சி



எல்ல, வெல்லவாய வீதியில் அமைந்துள்ள இராவணன் நீர்வீழ்ச்சிக்கு வருகைதரும் சுற்றுலாப் பயணிகள் கண்மூடித்தனமாகக் குப்பைகளை போடுவதால் அப்பகுதியின் சுற்றுச்சூழல் பாதிக்கப் பட்டுள்ளது. சுற்றுலாப் பயணிகளைக் கவர்ந்துள்ள இராவணன் நீர்வீழ்ச்சியைக் காண தினமும் பெருமளவான மக்கள் வருகை தருவது குறிப்பிடத்தக்கது. இராவணன் நீர்வீழ்ச்சி சரணாலயத்தில் ஏராளமான விலங்குகள் மற்றும் பறவைகள் வாழ்ந்து வருகின்றன.

இந்நிலையில், இங்கு போடப்படும் குப்பைகளை உண்பதால் விலங்குகளின் உயிருக்கு ஆபத்து ஏற்படுகின்றது.(05)

# யாழில் விடுதியில் தங்கியிருந்த மூன்று யுவதிகள் கைதாகினர்

யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் விடுதி ஒன்றில் சந்தேகத்திற்கு இடமான முறையில் தங்கியிருந்த மூன்று யுவதிகள் திங்கட்கிழமை காலை கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் - கண்டி நெடுஞ்சாலையில், மாவட்ட செயலகத்திற்கு சற்று தொலைவில் உள்ள தனியார் விடுதி ஒன்றில் சந்தேகத்திற்கு இடமான முறையில் ஆள் நடமாட்டம் உள்ளதாக யாழ்ப்பாண பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் குறித்த விடுதிக்கு பொலிஸார் சென்று சோதனையிட்டனர்.

அதன்போது, விடுதியில் எவ்வித பதிவுகளும் இன்றி தங்கியிருந்ததுடன், தமது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்த தவறிய மூன்று யுவதிகளை பொலிஸார் கைது செய்தனர்.

கைதுசெய்யப்பட்ட யுவதிகளை விசாரணைகளின் பின்னர் யாழ். நீதிவான் முன்னிலையில் முற்படுத்திய வேளை, அவர்களை எதிர்வரும் 26ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்ட நீதிவான், மூவரையும் மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்துமாறும் உத்தரவிட்டுள்ளார்.
(05)

# ஜனாதிபதி தேர்தல் தொடர்பில் இதுவரை 631 முறைப்பாடுகள்

ஜனாதிபதி தேர்தல் தொடர்பில் இதுவரை (ஜூலை மாதம் 31 ஆம் திகதி முதல் ஓகஸ்ட் மாதம் 18 ஆம் திகதி வரை) 631 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாகத் தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அதன்படி, தேர்தல் சட்டங்களை மீறியமை தொடர்பில் தேசிய தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையத்திற்கு 346 முறைப்பாடுகளும், மாவட்ட தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையத்திற்கு 261 முறைப்பாடுகளும் கிடைக்கப்பெற்றுள்ளன.

இதேவேளை, மாவட்ட தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையத்திற்கு வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில் ஒரு முறைப்பாடும் ஏனைய விடயங்கள் தொடர்பில் 23 முறைப்பாடுகளும் கிடைக்கப்பெற்றுள்ளன.
(05)

# உள்நாட்டு துப்பாக்கியுடன் ஒருவர் மஹதிவுல்வெள பகுதியில் கைது

திருகோணமலை, மொரவெள பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மஹதிவுல்வெள பிரதேசத்தில் உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கியுடன் சந்தேக நபர் ஒருவர் ஞாயிற்றுக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார் என மொரவெள பொலிஸார் தெரிவித்தனர்.

மொரவெள பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர் மஹதிவுல்வெள பிரதேசத்தை சேர்ந்த 37 வயதுடைய நபராவார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளில் மொரவெள பொலிஸார் ஈடுபட்டு வருகின்றனர்.
(05)

# யாழ். செல்வச் சந்நிதியில் 35 பவுண் நகை அபகரிப்பு

யாழ்ப்பாணம் செல்வ சந்நிதி முருகன் ஆலய தேர்த்திருவிழாவில் கலந்து கொண்டிருந்த பக்தர்களின் சுமார் 35 பவுண் தங்க நகைகள் அபகரிக்கப்பட்டுள்ளது.

வரலாற்று சிறப்பு மிக்க செல்வ சந்நிதி முருகன் ஆலய வருடாந்திர தேர் திருவிழா ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.

தேர்த்திருவிழாவில் நாட்டின் பல பாகங்களில் இருந்தும் , வெளிநாடுகளில் இருந்தும் , பெருந்திரளான பக்தர்கள் ஆலயத்திற்கு வருகை தந்து தேர் திருவிழாவை' நேரில் கண்டு களித்தனர். அதன் போது ஆலய சூழல்களில் சனநெரிசல்களை பயன்படுத்தி திருடர்கள் தம் கைவரிசைகளை காட்டியுள்ளனர்.

பல பக்தர்களின் பெறுமதியான தங்க நகைகள் அபகரிக்கப்பட்டுள்ளன. தமக்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளின் அடிப்படையில் சுமார் 35 பவுண் நகைகள் அபகரிக்கப்பட்டுள்ளதாகவல்வெட்டித்துறை

# மண்டூரில் தீர்த்தம்

'சின்னக்கதிர்காமம்' என அழைக்கப்படும் மண்டூர் கந்தசுவாமி ஆலயத்தின் வருடாந்த உற்சவத்தின் தீர்த்தோற்சவம் நேற்று (திங்கட் கிழமை) காலை ஆயிரக்கணக்கான பக்தர்கள் படைசூழ இடம்பெற்ற போது...

படங்கள். வி.ரி.சகாதேவராஜா











காலைக்கதிர் Kalaikkathir

# 12 வயது சிறுமி பாலியல் துஷ்பிரயோகம்: முதியவர் உட்பட ஐந்து பேர் கைதாகினர்

## களுத்துறையில் சம்பவம்

களுத்துறை, தியகம பிரதேசத்தில் 12 வயது சிறுமி ஒருவரை பலமுறை பாலியல் துஷ்பிரயோகம் செய்ததாக கூறப்படும் ஐந்து சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளர் என களுத்துறை வடக்கு பொலிஸார் தெரிவித்தனர்.

இதுதொடர்பில்பொலிஸாருக்குகிடைத்ததகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் ஐவரும் இந்த சிறுமியின் குடும்ப சூழ்நிலையை பயன்படுத்தி பொருள்கள் மற்றும் பண உதவிகளை வழங்குவதாக கூறி சுமார் இரண்டு வருட காலமாக இந்த சிறுமியை பலமுறை பாலியல் துஷ்பிரயோகம் செய்துள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களில் 70 வயதுடைய முதியவர் ஒருவரும் காணப்படுவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை களுத்துறை வடக்கு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

## விபத்தில் சிக்கி

# சிகிச்சை பெற்றுவந்த 3 வயது சிறுமி இறப்பு

வத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த சிறுமி ஒருவர் கடந்த 16 ஆம் திகதி சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

கண்டி, ஹசலக்க பிரதேசத்தைச் சேர்ந்த 03 வயதுடைய சிறுமியொருவரே உயிரிழந்துள்ளார்.

இதுதொடர்பில்தெரியவருவதாவது-

இந்த சிறுமி கடந்த 11 ஆம் திகதி கண்டி - மஹியங்கனை வீதியில் உள்ள கடை ஒன்றிற்கு அருகில் தனது மூத்த சகோதரியுடன் விளையாடிக் கொண்டிருந்துள்ளார்.

இதன்போது, சாரதியின் கட்டுப் பாட்டை இழந்த ஓட்டோ ஒன்று இந்த சிறுமியை மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

இதனையடுத்து,காயமடைந்தசிறுமி அருகில்உள்ளபிரதேசவைத்தியசாலை ஒன்றில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காகக் கண்டி பொது வைத்தியசாலைக்குமாற்றப்பட்டுள்ளார்.

இந்நிலையில், சுமார் 6 நாள்களாக வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த இந்த சிறுமி கடந்த 16 ஆம் திகதி சிகிச்சைபலனின்றி உயிரிழந்துள்ளார். (05)

# ரயில் மோதி லொறி விபத்து: ஒருவர் சாவு; ஒருவர் காயம்




கொஸ்கொட, இதுருவ பிரதேசத்தில் ரயில் கடவைக்கு அருகில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் மற்றுமொருவர் காயமடைந்துள்ளதாக கொஸ்கொட பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து நேற்று (திங்கட்கிழமை) பிற்பகல் இடம்பெற்றுள்ளது.

கொஸ்கொடையிலிருந்து விறகுகளை ஏற்றிச் சென்ற லொறி ஒன்று காலியிலிருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த ரயில் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இந்த விபத்தின் போது, லொறியில் பயணித்த இருவரும் படுகாயமடைந்துள்ள நிலையில் அவர்களில்ஒருவர்சம்பவஇடத்திலேயே உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இதுருவ பிரதேசத்தில் வசிக்கும் 55 வயதுடைய நபரொருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

காயமடைந்தவர் சிகிச்சைக்காக வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கொஸ்கொடபொலிஸார்மேற்கொண்டுவருகின்றனர். (05)

# ஓட்டோ - பஸ் மோதி விபத்து

## மூவர் காயம்

கல்முனை - மட்டக்களப்பு வீதியில் களுவாஞ்சிக்குடி நீதிமன்றத்திற்கு அருகில் இடம்பெற்ற விபத்தில் மூவர் காயமடைந்துள்ளனர்.

இந்த விபத்து ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் இடம்பெற்றுள்ளது.

சாரதியின் கட்டுப்பாட்டை இழந்த ஓட்டோஒன்றுஎதிர்த்திசையில்பயணித்த இலங்கை போக்குவரத்துச் சபைக்கு சொந்தமானபஸ்ஒன்றுடன்மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இந்த விபத்தின் போது ஓட்டோவில் பயணித்த மூவர் காயமடைந்துள்ள நிலையில் சிகிச்சைக்காக வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.(05)

# நாட்டிலுள்ள காட்டு யானைகளை கணக்கெடுக்கும் பணிகள் நிறைவு



நாடு முழுவதும்ஆரம்பிக்கப்பட்டுள்ளயானைகள் கணக்கெடுக்கும் பணி நேற்று(திங்கட்கிழமை)யுடன் நிறைவடைந்தது என வனவிலங்கு திணைக்களம் தெரிவித்துள்ளது.

யானைகளின் கணக்கெடுப்பு அறிக்கையை வழங்குவதற்கு சுமார் 03 மாதங்கள் ஆகும் என அதன் பணிப்பாளர் நாயகம் எம்.ஜி.சி.சூரியபண்டார தெரிவித்துள்ளார்.

13 ஆண்டுகளுக்கு பிறகு கடந்த 17 ஆம் திகதி யானைகள்கணக்கெடுக்கும்பணிஆரம்பிக்கப்பட்டது.

3,200 மையங்களை மட்டும் வைத்து மூன்று நாள்களாக கணக்கெடுப்பு நடத்தப்பட்டதாக வனவிலங்குகள் பணிப்பாளர் நாயகம் எம்.ஜி.சி.சூரியபண்டார தெரிவித்தார்.

அதற்காக சுமார் 7,000 வனவிலங்கு அதிகாரிகள் குழு கணக்கெடுப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதாக வனவிலங்கு திணைக்களம் தெரிவித்துள்ளது.

மூன்று நாள்களில் யானைகள் குறித்து கிடைத்த தகவல்கள் கணினிமயமாக்கப்பட உள்ளதுடன் மூன்றுமாதங்களின்பின்னர்நாட்டில் காட்டு யானைகளின் எண்ணிக்கை தொடர்பில் அறிக்கை வெளியிடப்பட உள்ளது.

குறித்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள தகவல்களின் அடிப்படையில் காட்டு யானைகள் தொடர்பான அனைத்து தீர்மானங்களும் எடுக்கப்படும் என வனஜீவராசிகள் பணிப்பாளர் நாயகம் எம்.ஜி.சி.சூரியபண்டார தெரிவித்துள்ளார்.

கடந்த 2011ஆம் ஆண்டு காட்டு யானைகள் கணக்கெடுப்பு நாடு முழுவதையும் உள்ளடக்கி மேற்கொள்ளப்பட்ட கணக்கெடுப்பில் நாட்டில் 5,879 காட்டு யானைகள் வாழ்ந்து வருவதாக தெரியவந்துள்ளது. (05)

# கடற்படை வெள்ள நிவாரணகுழு பரகொடவுக்கு அனுப்பி வைப்பு




நாட்டில் நிலவும் சீரற்ற வானிலையால் களுத்துறை மாவட்டத்தின் பரகொட பகுதிக்கு நிவாரண நடவடிக்கைகளுக்குகுழுவொன்று அனுப்பப்பட்டுள்ளது.

அதன்படி, களுத்துறை மாவட்டத்தின் புளத்சிங்கள பிரதேசத்தில் வெள்ளம் ஏற்பட்டுள்ளதால் பொதுமக்களுக்குநிவாரணம்வழங்குவதற்காக வெள்ளநிவாரணக்குழுபரகொட பகுதிக்கு அனுப்பப்பட்டுள்ளது.

நேற்று (திங்கட்கிழமை) பரகொடவில்வெள்ளநிவாரணப் பணிகளில்நிவாரணக்குழுவினர் ஈடுபட்டுள்ளனர்.

மேலும், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான அவசர உதவி நடவடிக்கைகளை முன்னெடுக்க இலங்கை கடற்படையின் நிவாரண குழுக்கள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன.(05)

# குரங்கம்மை நோய் பரவல் குறித்து இலங்கை விழிப்புடன் உள்ளதாம்

## சுகாதார அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்

உலகளாவிய ரீதியில் குரங்கம்மை நோய் பரவல் அதிகரித்துள்ளமையால் இலங்கை நோய் தொடர்பில் விழிப்புணர்வை அதிகரித்துள்ளதாக சுகாதார அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

குரங்கம்மை நோயை சர்வதேச சுகாதார அவசர நிலையாக உலக சுகாதார ஸ்தாபனம் பிரகடனம் செய்துள்ளது.

குரம்மை நோய் தொற்றினால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை அதிகளவாக பதிவாகவில்லை. தற்காலிகமுன்னெச்சரிக்கைநடவடிக்கைகள் செயலில் இருப்பதால் நோய்த் தாக்கம் தொடர்பில் அச்சுறுத்தல் குறைவாக உள்ளது.

எனினும், கண்காணிப்பு நடவடிக்கைகளை அதிகரிக்க சுகாதார அமைச்சகம் கலந்தாசோசித்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

பலநாடுகளில்பாதிக்கப்பட்டவர்களின்எண்ணிக்கை குறிப்பிடத்தக்களவு அதிகரித்துள்ளமையினால் விமான நிலையங்கள் மற்றும் துறைமுகங்களில் கண்காணிப்பு நடடிவடிக்கைகளை அதிகரிக்க திட்டமிடப்பட்டுள்ளது.(05)

# ஹெரோயின் போதைப்பொருளுடன் மொரட்டுவையில் ஒருவர் கைது

மொரட்டுவை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட லுணாவ சந்திக்கு அருகில் ஹெரோயின் போதைப்பொருளுடன் சந்தேக நபர் ஒருவர் ஞாயிற்றுக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார் என மொரட்டுவை பொலிஸார் தெரிவித்தனர்.

மொரட்டுவை பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப் பட்ட சுற்றிவளைப்பில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மொரட்டுவை பிரதேசத்தைச் சேர்ந்த 25 வயதுடைய நபரொருவரேகைதுசெய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபரிடமிருந்து 05 கிராம் 450 மில்லிகிராம் ஹெரோயின் போதைப் பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது.

இது தொடர்பாக மேலதிக விசாரணைகளை மொரட்டுவை பொலிஸார் மேற்கொண்டு வருகின் றனர்.(05)

காலைக்கதிர்
Kalaikkathir

# தொழுநோய் மற்றும் தொற்றுநோய் தொடர்பான விழிப்புணர்வு ஏற்படுத்தும் நோக்கில் கலந்தாய்வு

## யாழில் நடந்தது

காலநிலை மாற்றத்திற்கூடாக உடல் உள ரீதியிலான தாக்கங்கள் எவ்விதமாக இருக்கிறது என்பதற்கான ஒரு விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தில் யாழ்ப்பாணத்தில் கலந்துரையாடல் ஒன்று ஞாயிற்றுக்கிழமை நடத்தப்பட்டது.

யாழ்ப்பாணம் மாவட்ட ஹொக்கி அணியுடன் இணைந்து இந்த விழிப்புணர்வு நிகழ்வை காவேரி கலா மன்றம் ஒழுங்குபடுத்தி நடத்தியது.

விளையாட்டு வீரர்கள் உடல் ஆரோக்கியம் தொடர்பான விடயத்தை சமூகத்தில் இருப்பவர்களுக்கு முன்மாதிரியாக இருப்பது மிக சிறப்பான விடயம். எனினும், விளையாட்டு வீரர்கள் சூழலியல் பார்வையில் அக்கறை உள்ளவர்களாக இருப்பதன் ஊடாக எவ்விதமாக உடல் ஆரோக்கியம் மிக்க ஒரு சமூகத்தை கட்டியெழுப்ப முடியும் என்பதை குறித்தும் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காகவே இந்த செயற்பாட்டினை காவேரி கலா மன்றம் அறிமுகப்படுத்தியது.

அந்தவகையில் காவேரி கலா மன்றம், இந்த ஓகஸ்ட் மாதத்தில் காலநிலை மாற்றம் உடல் உள ஆரோக்கியம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக யாழ். மாவட்டத்தில் இருக்கக்கூடிய ஹொக்கி அணியினரோடு இணைந்து இந்த ஹொக்கி விளையாட்டு போட்டியை வைப்பதற்கூடாக சமூகத்தில் விழிப்புணர்வை ஏற்படுத்த தீர்மானித்துள்ளது.

இதனூடாக சமூகத்திலே பல்வேறு நிலைகளில் இருக்கக்கூடிய சமூகமட்ட அமைப்புகளிடம் விழிப்புணர்வை ஏற்படுத்தி, ஆரோக்கியமான சமூகத்தை கட்டியெழுப்பி, சூழலியல் சார்ந்த விடயங்களில் அதிகமான பங்களிப்புகளை நாம் கொடுக்க வேண்டும் என்ற விழிப்புணர்வை ஏற்படுத்தவுள்ளது.

குறிப்பாக ஓர் விளையாட்டு வீரர் விளையாட்டு வீரராக மட்டும் அல்லாமல் தனது நாளாந்த செயற்பாடுகளில் எவ்விதமாக சூழலியல் மேம்பாட்டுக்கு பங்களிப்பை செய்யக்கூடும், நடந்து செல்லக்கூடிய இடங்களுக்கு நடந்து செல்கின்ற பொழுது அல்லது சைக்கிளில் செல்கின்ற பொழுது ஒரு விளையாட்டு வீரனாக சூழல் மேம்பாட்டுக்கு தனது பங்களிப்பை கொடுக்கின்றான்.

அவ்விதமாக தொற்றும், தொற்றா நோய்கள் குறித்த விழிப்புணர்வை தனது குடும்பத்திலும் தனது விளையாட்டு கழகத்துள்ளும் தனது சமூகத்துக்குள்ளும் விழிப்புணர்வை ஏற்படுத்துகின்ற மிகச்சிறந்த ஓர் சமூக விழிப்புணர்வை முன்கொண்டு செல்கின்ற ஓர் ஊடகமாக திகழும். இதை அடிப்படையாகக்




கொண்டு காவேரி கலா மன்றம் இந்த விழிப்புணர்வை ஏற்படுத்துகின்றது.

குறிப்பாக தொற்றும் நோய்களில் அதிகமான பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய பல்வேறு நோய்கள் தற்போது எமது பிரதேசத்தில் இருக்கிறது. அந்த நோய்களில் இருந்து நாம் விடுபெறுவது சமூகமட்டத்தில் விளையாட்டு வீரர்கள் விழிப்புணர்வை ஏற்படுத்துவர்.

குறிப்பாக தொழுநோயினால் பாதிக்கப்படக்கூடிய வாய்ப்புக்கள் அதிகமாக இருக்கின்றபடியினால் அவைகளில் இருந்து நாம் தற்காத்துக் கொள்வதற்கான விழிப்புணர்வை பெறுவதற்கான ஒரு ஊக்கத்தையும் இந்த செயற்பாடுகள் கொடுக்கும் என்ற நோக்கத்தில் இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இதில் விருந்தினர்கள், துறைசார் வைத்திய நிபுணர்கள், தொழுநோயாளர் மறுவாழ்வுக்கான சங்கத்தினர், காவேரி கலா மன்றத்தினர், யாழ்ப்பாண மாவட்ட ஹொக்கி அணியினர் என பலர் கலந்துகொண்டனர்.(05)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 20.08.2024இல் வெளியிடப்பெற்றது